இதழ்-85

01.07.2025

# தூமி

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thu-

ஆசிரியர்
ச.சந்தோஷன்

இணை ஆசிரியர்
ஜ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

செய்தியியலாளர்
ச.மதுஷா

வடிவமைப்பாளர்
ர.அபிரா
வ. குணநீதன்

திறனாய்வாளர்
கு.கீர்த்தனன்

# இவ்விதழில் துமித்தவை....

03 இயற்கைப் பேரழிவுகளை விட அதிக உயிரிழப்புக்களை ஏற்படுத்தும் வீதி விபத்துக்கள்

06 மரபுகளை கடத்துகின்ற திருவிழாக்கள்

09 ஈழத் தமிழ் உலகின் அருஞ்சொத்து பேராசிரியர் சி. தில்லைநாதன் அமரத்துவம் அடைந்தார்

12 ஈழத்தின் பொக்கிஷம் பேராசிரியர் கா.சிவத்தம்பி

16 மனிதன் உருவாக்கிய சூரியன்

17 துன்புறுத்தல்

21 இஸ்ரேல் எனும் ஆச்சரியங்களின் தேசம்

29 உரிமையற்று உயரும் மலையகம் காணியின் கேள்விக்குள் அடையாளத் தேடல்.

35 அபயம் அறக்கட்டளையினால் அதிநவீன கட்புல சோதனை இயந்திரம் வழங்கி வைப்பு

36 மறுக்கப்பட்ட இனத்தில் இருந்து உருவான தலைவன் தெம்பா பவுமா


ஆசிரியர் பதிவு

# இயற்கைப் பேரழிவுகளை விட அதிக உயிரிழப்புக்களை ஏற்படுத்தும் வீதி விபத்துக்கள்

இந்திய விமானம் விபத்துக்குள்ளான செய்தி வெளியான உடனே, பலரும் ”எந்த இருக்கையில் அமர்ந்தால் உயிர் பிழைக்கலாம்?” என்ற கேள்வியில் ஆர்வம் காட்டினர். உண்மையில் அந்த விமானத்தில் பயணிக்காதவர்கள் கூட விமான பயணத்தின் பாதுகாப்பு குறித்து ஆராய்ந்தனர். ஆனால் நாம் தொடர்ந்து பயணிக்க வேண்டிய வீதிகளில் நாள்தோறும் நிகழும் விபத்துகளுக்குத் தீர்வு காண நம்மில் எத்தனை பேர் உண்மையான கவலை கொண்டிருக்கிறோம்?

2025ம் ஆண்டு தொடங்கி இன்றுவரை இலங்கையில் வீதி விபத்துகளால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை விமான விபத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையைவிட 4-5 மடங்கு அதிகம். இது எமது நாடு மட்டுமின்றி உலகளாவிய கவலையாக இருக்கிறது.

வீதி விபத்துகளின் முக்கிய காரணிகள் என்று பின்வருவனவற்றை கூறலாம்



1. வேகக்கட்டுப்பாடின்மை
2. மது அருந்தி வாகனம் ஓட்டுதல்
3. மனச்சோர்வு அல்லது உறக்கத்துடன் வாகனம் செலுத்துதல்
4. வீதியை பயன்படுத்துவோர் வீதிப்போக்குவரத்து விதிகளை பின்பற்றாமை
5. குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை கிடைக்காமை

இவை அனைத்தினதும் அடிப்படை சாரதியின் கவனயீனமும் தவறுமாகவே இருக்கும். அதாவது மனித தவறுகள். ஆனால் அவை ஒருவரின் தவறாக இருந்தாலும் பலர் மீது தாக்கம் ஏற்படுத்தும். இது மிகப்பெரும் துர்பாக்கியம்.

அண்மையில் நிகழ்ந்த ஒரு கொடூர விபத்தில் ஒரே குடும்பத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர். மற்ற இரண்டு பேர் தீவிரமான காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நம்மில் பலர் அந்த சம்பவத்தின் மீது சில நாட்கள் சோகத்தை வெளிப்படுத்தினாலும், பின்னர் மறந்து விடுகிறோம். இது தவிர்க்க முடியாத இயற்கை பேரழிவு அல்ல் மனித தவறுகளால் நிகழும் மனிதநேயம் இழந்த பேரழிவு.

நம்மால் என்ன செய்ய முடியும்?

1. போக்குவரத்து ஒழுங்கை கடைபிடிக்க வேண்டும்.
ஒவ்வொருவரும் தாங்கள் நடக்கும் வீதியை பாதுகாக்கும் பொறுப்பு உள்ளவர்களாக எண்ணிக்கொண்டு நடக்க வேண்டும்.




2. வாகன ஓட்டுநர்களுக்கு கட்டாய பயிற்சி மற்றும் நெறிமுறைகள் தேவை.
ஓட்டுநர் உரிமம் பெறும் முன் முழுமையான பயிற்சி, மற்றும் விதிகளை மதிக்கும் மனப்பாங்கு வளர்க்க வேண்டும்.

3. மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வியில் போக்குவரத்து ஒழுங்கு கற்பிக்க வேண்டும். சிறு வயதிலிருந்தே ஒழுங்கு நடைமுறைகளை

கற்றுக்கொடுத்தால் எதிர்காலத்தில் பொறுப்பான குடிமக்கள் உருவாக முடியும்.

4. சிசிடிவி, போலீசார் கண்காணிப்பு போன்ற நடவடிக்கைகளை தீவிரமாக்க வேண்டும். அதோடு குற்றவாளிகளுக்கான தண்டனையும் கடுமையாக்கப்பட வேண்டும்.

5. முக்கியமாக நாம் ஒவ்வொருவரும் தன்னிலைப் பார்வையை வளர்க்க வேண்டும். நான் மட்டுமா தவறு செய்தேன்? எல்லாரும் தானே செய்கிறார்கள். என்று தப்பித்துக் கொள்ளாமல் நானும் ஒரு பொறுப்புள்ள நபர்தான் என்று எண்ண வேண்டும்.

விமான விபத்து ஒரு விந்தையான நிகழ்வாக இருக்கலாம். ஆனால் வீதி விபத்து என்பது நாள்தோறும் நடைபெறும் அவலச் செய்தி. அதனால் வீதி விபத்துக்களை தடுக்கும் வழிகளை ஆராய்ந்து, அதன் மீது சரியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய நேரம் இது. நம்மிடம் உள்ள முக்கியமான சொத்து உயிர். அதை பாதுகாப்பது நம் கடமை. வீதி ஒழுங்கைப் பற்றி இன்று நாம் சிந்திக்காவிட்டால், நாளைய விபத்து செய்தியில் நம்மை அல்லது நம் நெருங்கியவர்களைப் பற்றிய புலம்பல்கள் இடம்பெறக்கூடும்.





# மரபுகளை கடத்துகின்ற திருவிழாக்கள்

திருவிழா என்பது ஒரு நாள் கொண்டாட்டமல்ல் அது நம் இனத்தினால் ஆயிரம் ஆண்டுகளாக எடுத்துச் செல்லப்படும் ஒரு கலாச்சாரத் தொடர்ச்சி. அந்த அழகான நாளில் மறைந்திருந்த எங்கள் வீதிகள்,தங்களின் சொந்த அடையாளங்களை மீண்டும் மீட்டெடுக்கும். வீதி முழுதும் மனிதச் சுவாசம் நிரம்பியிருக்கும்.

விழா என்றால் அது எப்போதும் கோயிலோடு மட்டும் அல்ல. அது வீதிகளிலும் ஒளிரும். வீடுகளுக்குள்ளும் நுழையும்.

திருவிழா வீதிகள்....
சுவர்களில், தூண்களில் அலங்காரம் வாசல் தோறும் நிறை குடம்
இரவினை அழகாக்கும் வண்ண விளக்குகள்..
முழங்கும் மேள தாளங்கள்... நடனமாடும் வண்ணங்கள்

மயில் வடிவ வாகனங்களிலும், அழகு மற்றும் வீரம் சொல்கின்ற பெரிய பொம்மைகளிலும், களையாத கலைஞர்களின் ஒற்றுமையிலும் கலந்து நிற்பது நம் மரபு மட்டும் அல்ல் ஒரு வாழ்வாங்கு வாழ்வு!



திருவிழா வீதிகளில் பரவியுள்ள இந்த சுதந்திரமான கலைகளும் அது தருகிற ஆடம்பரமான மகிழ்ச்சியும் நமக்கு பண்டை தமிழரின் களி, பக்தி, கலை, பழக்கவழக்கம் ஆகிய செல்வச் சீர்களின் சிறப்பை உணர்த்திச் செல்கின்றன.

இன்றைய உலகம் நகர்வாகி விட்டாலும், நம் மூலக்கலாசாரம் என்ற மரம் வேருடன் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. இந்த மேள முழக்கமும், ஆடல் அசைவுகளும் இன்றும் எமக்கு இத்தனை பூரிப்பை அளிக்கின்றன என்றால் நம் வேர் எவ்வளவு ஆழமானது என்பதை உணரமுடியும்.

அந்த கோவில் வீதியில் நடந்து செல்லும் ஒரு குழந்தையின் கண்களில் தெரியும் அதிசயமும், ஒரு முதியவர் முகத்தில் தெரியும் நெகிழ்ச்சியும் ஒரே உணர்வையே பகிர்கின்றன: கலாசாரம் பயணப்படுவதை நாம் கண்கூடே காண்கிறோம்.

மழையும் வெயிலும் நமக்கு அந்நியமல்ல. ஆனால் விழா நாளில் பெய்யும் மழை பெருஞ்சிறப்பு. மழை நனைக்கும் போதும் மேளம் மாறுவதில்லை. அது இன்னும் உருக்கமாகிக்கொள்கிறது. நனைந்த ஆடையிலும் மக்கள் ஆடுவார்கள், சிரித்துக் கொள்வார்கள். ஏனெனில் அவர்களுக்கு விழா என்பது உடலினால் கொண்டாடுவதல்ல் உள்ளத்தால் கொண்டாடுவது.



நம் முன்னோர்கள் வெகு நேர்த்தியாக இந்த விழாக்களை வடிவமைத்துள்ளனர். இது வெறும் ஆடல், பாடல் மட்டுமல்ல. இது ஓர் உறுதிமொழி எதுவாகி விட்டாலும், நம் பாரம்பரியம் கைவிடப் படக் கூடாது! என்பதற்கான விழிப்புணர்வுக் கோலம்.

விழா நாள் முடிந்தாலும், அந்த வீதிகளில் அந்த ஒலி சில நாட்கள் நிலைத்திருக்கும். தூண்களில் தொங்கிய கொடிகள் மெதுவாக உதிரும். ஆனால் நம் உள்ளத்தில் அந்த விழா அடுத்த ஆண்டுவரை பசுமையாகவே இருக்கும். குழந்தைகள் அடம்பிடித்து வாங்கிய விளையாட்டு பொம்மைகள், பெரியவர்களுக்கு கிடைத்த அந்த வழிபாட்டு நிமிடங்கள், உறவுகளுடனான உரையாடல்கள் இவை வாழ்க்கையின் செழிப்பான நினைவுகள். அடுத்த ஆண்டு திருவிழா வரை இந்த நினைவுகள் தாங்கியே மகிழ்ந்திருப்பர் மக்கள்.

யாரோ ஒரு மூதாட்டி சொல்லிக்கொள்வாள்.

இந்த திருவிழா வந்தாத்தான எங்கட ஊருக்கு உயிர் வரும்..


இந்த மாதிரி விழா கொண்டாட்டத்தில்தான் ஊர்மக்களின் வாழ்க்கையின் பிரகாசமான பக்கங்கள் எழுதப்படுகின்றன.

நாட்கள் கழிந்த பிறகும் அந்த திருவிழா நினைவுகளை நினைத்தபடி ஒரு முறை மூச்சு இழுக்கிறீர்கள் என்றால் அதை விட இன்பமான நினைவு வேறில்லை.

திருவிழாக்களில் தாயை கையில் பிடித்துக்கொண்டு, கூட்டத்தில் தொலைந்து போகாமல் நின்ற அந்த சிறு வயது நாட்கள் போல் இன்பத்தை அள்ளித்தரக்கூடிய எங்கள் கலாசாரத்தையும், மரபுகளையும் தொலைந்து விடாமல் இறுகப்பிடித்துக் கொள்வோம். இன்பத்திற்காக ஏங்கும் வருங்கால உலகம் அதை எங்களிடம் வந்து பெற்றுக் கொள்ளட்டும்.



# ஈழத் தமிழ் உலகின் அருஞ்சொத்து பேராசிரியர் சி. தில்லைநாதன் அமரத்துவம் அடைந்தார்



தமிழ் ஆர்வலரும் சிந்தனையாளரும், தமிழர் போற்றும் ஆய்வறிவாளரும், பல்கலைக் கழகத்தின் இலக்கிய கர்த்தாக்களில் ஒருவருமான அன்பும் பண்பும் நிறைந்த எமது பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்கள் காலமான செய்தி நெஞ்சை உலுக்குகிறது.

மும்மொழி அறிவும் திறனாய்வாளரான பேராசிரியர் மானிடரை நேசிப்பவராகவும் மாணவரை அரவணைப்பவராவும் இருந்தவர்.

பேராசிரியர் தில்லைநாதன் அவர்கள் 02.05.1937ஆம் ஆண்டு சின்னத்தம்பி - நாகம்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்றார்.1948-ஆம் ஆண்டில், இவர் இடைநிலைக் கல்வியை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கற்று அறிந்து.1956-

ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் கிளரிக்கல் பரீட்சையில் தேற்றி இராணுவத் தலைமை அலுவலகத்தில் நியமனம் பெற்றார்.1957-ஆம் ஆண்டு பல்கலைக் கழக அனுமதி கிடைத்தது.

அக்காலத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இருந்து இருவரே பல்கலைக் கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டனர். பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டில் தமிழ், பொருளியல், வரலாறு முதலான பாடங்களை எடுத்துக் கொண்டார். இவருடைய சக மானாக்கராக மு.தளையசிங்கம், தொலைத் தொடர்பு சாதனங்களின் அமைச்சரின் செயலாளர் கே.சி.லோகேஸ்வரன், அரச அதிபராக இருந்த செந்தில்நாதன், பேராசிரியர் பூலோகசிங்கம், பேராசிரியர் ஜே.பி.திசாநாயக்க, முதலியோர் இருந்தனர்.

பேராசிரியர் தமிழை பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வி.செல்வநாயகம், பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் ஆ.சதாசிவம், முதலியோரிடம் துறைபோகக் கற்றார். 1959-ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக் கழகத்தின் சஞ்சிகையான இளங்கதிர் நடாத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றார். 1959-ஆம் ஆண்டு இந்து இளைஞர் நடாத்திய கட்டுரைப் போட்டியிலும் முதல் பரிசினைப் பெற்றார்.1960-ஆம் ஆண்டு இளங்கதிர் நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதல் பரிசான தங்கப்பதக்கத்தை பெற்றுக் கொண்டார். 1960-களில் பல்கலைக் கழகத்தில் இருந்து முதல் மாணவனாக வெளியேறி 1961இல் ஏரிக்ரைப்பத்திரிகை என அறியப்படும் தினகரன், ஒப்சேவர் பத்திகையின் ஆசிரியர் குழுவில் ஒருவராகக் காணப்பட்டார். இக்காலப்பகுதியில் எஸ்மன்ட் விக்கிரமசிங்கவின் கீழ் பணியாற்றினார்.

பேராசிரியர் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் காலத்திலேயே அங்கிருந்து வந்த பேராதனைக் கவிதைகள் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தார். இது தவிர இளங்கதிர், முஸ்லிம் மஜ்லிஸ், இந்து தர்மம் முதலான பத்திரிகைகளிலும் எழுதினார். இவர் ஆங்கிலப் பத்திரிகையான ஒப்சேவரில் பணியாற்றிய காலப் பகுதியில் யாழ்ப்பாண சாதி அமைப்புக்கள், திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்பான கட்டுரைகளையும் எழுதியுள்ளார். ஏரிக்கரைப் பத்திரிகையில் பணியாற்றிக் கொண்டு வருகை தரு விரிவுரையாளராகப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் அரிய வாய்ப்பினைப் பெற்றார்.

1964-இல் தமிழ் பேராசிரியர் சி.தில்லைநாதன் அவர்கள் பேராசிரியர் மு.வரதராஜன் தலைமையின் கீழ் அரசவை இலக்கியங்கள் என்னும் தலைப்பின் கீழ் ஆய்வினை மேற்கொண்டு முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். 24.04.1985 அன்று இணைப் பேராசிரியராகக் கடமையாற்றிய பேராசிரியர் கலாகீர்த்தி சி. தில்லைநாதன் 15.01.1991 முதல் தமிழ் பேராசிரியராக விளங்கினார். வித்தியோதயப் பல்கலைக்கழகத்தில் முதன் முதலில் தமிழ் உதவி விரிவுரையாளராகவும் பணியாற்றினார். 1964 ஒக்டோபர் 1965 ஏப்ரல் வரை நிரந்தர விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து 1969 - 1975 காலப்பகுதியில் விரிவுரையாளராகவும் 1975 - 1985 காலப்பகுதியில் முதுநிலை விரிவுரையாளராகவும் கடமையாற்றினார். பல்கலைக் கழகத்தில் கடமையாற்றிய காலப்பகுதியில் 1973 இல் தகுதி என்ற நாடகத்தை மேடையேற்றினார். 1974-இல் மானிடம் என்பது புலலோ என்ற நாடகத்தையும் மேடையேற்றினார். யாழ்ப்பாண சாதியக் கட்டுமானங்களை இந்நாடகம் தகர்த்தெறிந்தது.

1997ஆம் ஆண்டு யூலைமாதம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்சபை உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டார். இப்பதவியைப் பெற்றுக் கொண்ட முதல் தமிழ் பேராசிரியர் இவரே ஆவார். 1993-ஆம் ஆண்டு இந்துக் கலாசார இராஜங்க அமைச்சரினால் இலக்கியச் செம்மல் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். 1994-ஆம் ஆண்டு இலங்கையின் அதி உயர் தேசிய விருதான கலாகீர்த்தி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவர் எழுதிய நூல்களாக வள்ளுவன் முதல் பாரதிதாசன் வரை (1967), இலங்கைத் தமிழ் இலக்கியம் (1997), பண்பாட்டுச் சிந்தனைகள் (2000), சோழர் கால அரசவை இலக்கியங்களமுதலானவற்றைக் கூறலாம்.

பேராசிரியர் இலங்கைத் தமிழ் இலக்கியம் குறித்து எழுதிய 27 கட்டுரைகளின் தொகுப்பே இலங்கைத் தமிழ் இலக்கியம். இந்நூல் தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடாக வெளிவந்தது. பேராசிரியர் கலாகீர்த்தி சி.தில்லைநாதன் அவர்கள் இஸ்லாமிய இலக்கியங்கள் குறித்து நிறையவே எழுதியுள்ளார். தமிழ் இலக்கிய அறிவு வரன்முறையை தமிழ் அறிவு எனும் அடித்தளத்தில் இருந்து கட்டியெழுப்பிய பேராசிரியரின் ஆன்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

# ஈழத்தின் பொக்கிஷம் பேராசிரியர் கா.சிவத்தம்பி

யாழ்ப்பாணம் அருகில் உள்ள வடமாராட்சி கரவெட்டியைச் சேர்ந்த தமிழ் பண்டிதரும், சைவ அறிஞருமான பொ. கார்த்திகேசு வள்ளியம்மாள் ஆகியோருக்கு மகனாக 10.05.1932 பிறந்தார் சிவத்தம்பி.
கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரி மற்றும் கொழும்பு சாஹிராக் கல்லூரியில் தனது பள்ளிக் கல்வியைப் படித்த சிவத்தம்பி, இளநிலை மற்றும் முதுகலைப் பட்டப் படிப்புகளை இலங்கை பல்கலைக் கழகத்திலும் பயின்றார்.

நான்கு ஆண்டுகள் கொழும்பு சாஹிராக் கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றிய பொழுது, இலங்கை பாராளுமன்றத்தில் சமகால மொழிபெயர்ப்பாளராகவும் (Simultaneous Interpreter) பதவி வகித்தார். இங்கிலாந்தில் உள்ள பெர்மிங்ஹாம் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து, பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம் (Drama in Ancient Tamil Society) என்ற தலைப்பில் மார்க்சிய அறிஞரான பேராசிரியர் ஜார்ஜ் தாம்சனின் வழிகாட்டலின் கீழ் ஆய்வு மேற்கொண்டு ,1970-ம் ஆண்டு முனைவர் பட்டம் பெற்றார்.



தமிழ் நாடகத்தின் தோற்றம் பற்றி விரிவாக ஆராய்ந்த இவர் தன் ஆய்வில் கிரேக்க நாடகங்களின் தோற்றம், வளர்ச்சி, தன்மைகள் ஆகியவற்றை விளக்கினார். அதுபோல் தொல்காப்பியம், சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் உள்ளிட்ட நூல்கள் கல்வெட்டுகள், நாணயங்கள் உள்ளிட்ட தரவுகளை உட்படுத்தி தனது ஆய்வை செய்திருந்தார். ஆங்கிலத்தில் இருந்த இவரது ஆய்வு தமிழுக்கு மொழிப்பெயர்க்கப்பட்டு என். சி.பி.எச் நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.

இந்த நூல் தமிழக அரசின் 1980-ம் ஆண்டிற்கான சிறந்த நூலுக்கான பரிசினைப் பெற்றது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 1978 முதல் 1996 வரை பதினெட்டு ஆண்டுகள் பேராசிரியராகவும், அதன் பின் மட்டக்களப்பில் உள்ள கிழக்கு இலங்கைப் பல்கலைக் கழகத்தில் இரண்டு ஆண்டுகள் பேராசிரியராகவும் பணியாற்றினார்.

இலங்கைப் பல்கலைக் கழகங்கள் மட்டுமல்லாமல், தமிழகத்தில் உள்ள தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம், சுவீடனில் உள்ள உப்சலா மற்றும் பெர்க்லி, விஸ்கான்சியன், ஹார்வார்ட், கலிபோர்னியா ஆகிய பல்கலைக் கழகங்களிலும் வருகைதரு பேராசிரியராகவும் இருந்தார். மேலும், உலக புகழ்பெற்ற இங்கிலாந்து கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தின் தென் ஆசிய மையம், புதுடெல்லியிலுள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் வரலாற்றுக் கல்வி மையம், சென்னை அனைத்துலகத் தமிழராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றில் வருகை தரு பேராசிரியராகவும் பணிபுரிந்தார். தமிழக இலங்கை கலைச் சொல்லாக்கக் குழு உறுப்பினராகவும் செயற்பட்டுள்ளார்.

தமிழ்ச் சூழலில் மார்க்சிய ஆய்வுப் பின்புலத்தில் பண்டைய இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான அனைத்தையும் இணைத்துப் பார்க்கும் புலமை மரபு கொண்டவர். சமூகம், பண்பாடு, அரசியல் போன்ற களங்களின் ஆய்வு செய்யும் ஒரு புதிய மரபை தமிழுக்கு வழங்கியவர். ஊடகம், கலை, இலக்கணம் மற்றும் பண்பாடு சார்ந்து அவர் வெளிப்படுத்திய பார்வைகள் தமிழ் சிந்தனை மரபில் புதிய பார்வை கொண்டவை.



தமிழியல் பல்கலைகழக உயராய்வு செயல்பாடுகள் அனைத்தும் ஆய்வுத் தளத்தில் விரிவுபடுத்தி கொண்டு செல்வதில் மிகுந்த ஈடுபாடு உடையவராக இருந்தார்.

மாக்ஸ்முல்லர் உள்ளிட்ட பல மேற்குலக அறிவுஜீவிகள், சமஸ்கிருத மொழிதான் இந்தியா முழுவதும் பரவியிருந்த மொழி எனவும், இந்தியாவில் உள்ள பிறமொழிக்கு இலக்கண, இலக்கிய வளங்களை வழங்கிய மொழி எனவும் கருத்துகளைக் கூறி மேற்குலகம் முழுவதும் கட்டமைத்திருந்தனர். இதன்மூலம் சமஸ்கிருதம் முதன்மையான மொழியாக பதிவு செய்திருந்த காலத்தில், பழந்தமிழ் இலக்கியங்கள் கிரேக்க, ரோம இலக்கியங்களுக்கு இணையான பழைமையை உடையது,சிறப்பினை உடையது என ஆய்வுகள் மூலம் சான்றுகளுடன் நிறுவியவர்களில் பேராசிரியர் சிவத்தம்பியும் ஒருவர். சங்க இலக்கிய நூல்கள் மேற்குலகில் கவனம் பெற உழைத்தவர் கா.சிவத்தம்பி என்றும் சொல்லலாம்.

எம்.ஜி.ஆர் தமிழக முதல்வராக இருந்த போது மதுரையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டில், ‘The Politicians as Players’ என்ற ஆய்வுக் கட்டுரையில் எம்.ஜி.ஆர் குறித்த விமர்சனங்கள் இருந்ததால் வாசிக்க மாநாட்டுக் குழுவினரால் பேராசிரியர் கா.சிவத்தம்பிக்கு அனுமதி மறுக்கப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டார்.

முதல் உலகத் தமிழாசிரியர் மாநாடு சிங்கப்பூரில் 1992-ம் ஆண்டு நடைபெற்றது. அதில் பேராசிரியர் கா.சிவத்தம்பி கலந்துகொண்டு உரையாற்றினார். தஞ்சாவூரில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக்கு வருகை புரிந்த பேராசிரியர் கா.சிவத்தம்பி, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர் என முத்திரை குத்தப்பட்டு வந்த விமானத்திலேயே இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார்.



தமிழ்நாட்டில் கோவையில்


நடைபெற்ற செம்மொழித் தமிழ் ஆய்வு மாநாட்டின் ஆய்வரங்கக் குழுவின் தலைவராக விளங்கினார். தமிழீழ இனப்படுகொலை நடந்த காலகட்டத்தில் அதற்கு அன்றைய திமுக அரசு துணைபோனதாக தமிழ் உணர்வாளர்களும், ஆய்வாளர்களும் புறக்கணித்த மாநாட்டில் சிவத்தம்பி கலந்து கொண்டது, பெரும் விமர்சனங்களுக்கு உள்ளானது.

தமிழீழத்தைச் சேர்ந்த பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களின் வழிவந்த கடைசி ஆய்வாளராக சிவத்தம்பி இருந்தவர். பண்டிதமணி மறைந்த போது பேராசிரியர் சிவத்தம்பி எழுதிய அஞ்சலிக் குறிப்பு பண்டிதமணி காலம் ஆனார். என்று குறிப்பிட்டிருந்தார். இதன்மூலம் பண்டிதமணி காலம் ஒன்று இருப்பதை அடையாளங்காட்டினார்.
பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் தனது 79 வது வயதில் 2011 சூலை 6இல் காலமானார்.

பேராசிரியர் சிவத்தம்பி தமிழியல் ஆய்வுலகில் கடந்த அறுபது வருடங்களாக இயங்கி ஆய்வுத் திசைகாட்டி வந்துள்ளார். அது போலவே, பேராசிரியர் சிவத்தம்பி காலம் என கணிப்பிட்டு ஆய்வுகள் பெருகுவதற்கு நிறைய வாய்ப்புகள் உண்டு. எனவே பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி காலம் ஆனார் என்று ஆய்வாளர்கள் அஞ்சலி குறிப்பு எழுதினர்.



## மனிதன் உருவாக்கிய சூரியன்





சீனாவின் ”செயற்கை சூரியன்” (EAST) அணுசேர்க்கை ரியாக்டர் 100 மில்லியன் டிகிரி செல்சியஸ் வெப்பநிலையை 1,066 வினாடிகள் (சுமார் 18 நிமிடங்கள்) நிலைத்துவைத்துள்ளது, இது சூரியனின் உள்ளக வெப்பத்தைக் காட்டிலும் ஏழு மடங்கு அதிகம்.

இந்த சாதனை, ஹைட்ரஜன் மற்றும் டியூட்டீரியம் வாயுக்களை இணைத்து, சூரியனில் நடைபெறும் அணுசேர்க்கை செயல்முறையைப் பின்பற்றி, நிலையான பிளாஸ்மா நிலையை உருவாக்குவதன் மூலம் அடையப்பட்டது.

இந்த முயற்சி, சுத்தமான, பாதுகாப்பான மற்றும் முடிவில்லாத சக்தி மூலமாக அணுசேர்க்கையை மாற்றும் நோக்கத்தில் ஒரு முக்கிய முன்னேற்றமாகும்.

## ஆத்ம சாந்தி பிரார்த்தனை



இணுவில் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தாசபை முன்னாள் தலைவரும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்னாள் விஞ்ஞான பாட ஆசிரியரும், இணுவில் எவரெஸ்ட் கல்வி நிறுவன முன்னாள் நிர்வாகியும் ஆகிய இரா பாலச்சந்திரன் ஆசிரியர் அவர்கள் இறைபதம் அடைந்துள்ளார்.. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்..


அபயம்
இரகசியம் பேணும்
இலவச வைத்திய தொலைபேசி அழைப்பு சேவை
071 071 2345
மனநெருக்கீடுகளில்
இருப்பவர்களுக்கு உடனடி தொலைபேசி
வைத்திய ஆலோசனை வழங்கும் சேவை
துறை சார் மருத்துவர்களும் ,
குழுவினரும் உங்களை ஆறுதல் படுத்தி
தீர்வு காண்பதற்கு / வழிகாட்டுவதற்கு
தயாராக உள்ளனர் .
ஒரு நாளில் (24 மணி நேர இரவு பகல் சேவை)
எந்தநேரமும் ஒரு வைத்தியரை உடனடியாக
தொடர்பு கொள்ளலாம்
மனநெருக்கடிகளுக்கு உள்ளானவர்களை
காண்பவர்கள் இத் தொலைபேசி சேவையை
பெற்றுக் கொள்ள ஊக்கப்படுத்துங்கள்.
தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் அனைத்தும்
இரகசியமாக பேணப்படும்
ABAYAM
அபயம்
அபயம் - கல்வி மற்றும் உடல் நலம் சார்ந்த அறக்கட்டளை அமைப்பு



V.M. கபிலன்

# துன்புறுத்தல்

துன்புறுத்தல் என்ற விடயமானது இன்றைக்கு எல்லா இடங்களிலும் பொதுவானதொரு செயற்பாடாக காணப்படுகிறது. மேலும் துன்புறுத்தல் என்பது மனிதனுக்கு எதிர்பாராத தருணத்தில் இடம்பெறுகின்ற மனதளவிலான மற்றும் உடலளவிலான பாதிப்பை தருகின்ற ஒரு சமூக பிரச்சனையாகக் காணப்படுகின்றது.

இது இன்றைய சமுதாயத்தில் மட்டுமல்லாமல் பண்டைய காலங்களிலும் இருந்தே வந்துள்ளன.இத் துன்புறுத்தலானது ஓர் தரப்பு, இன்னுமோர் தரப்பை விட பொருட்பலம் அல்லது ஏதோ ஒரு விதத்தில் உடற்பலம் குறைந்து காணப்படும் பொழுது,பொருட்பலம் அல்லது உடற்பலம் கொண்ட தரப்பினரால் மேற்கொள்ளப்படும் அடக்கு முறையேயாகும். இது ஆரம்பத்தில் ஆண்டான், அடிமை சமூகம் போன்றவற்றில் இடம் பெற்றுள்ளது. மேலும் குடும்பத்தில் தொடங்கி நாடுகள் வரை இடம்பெற்றுக் கொண்டே தான் இருக்கின்றன.

இத் துன்புறுத்தலானது தொடர்வதற்கு தங்கள் பலத்தை நிலைநாட்ட வேண்டிய தேவை உணர்வது முக்கிய காரணமாகும்,அதாவது தொடர்ச்சியாக பலத்தை நிரூபிக்க துன்புறுத்தல் என்பதனை மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.துன்புறுத்தலானது இன்றளவில் பாடசாலை மாணவர்களிடையேயும் பல்கலைக்கழக மாணவர்களுடைய தளங்களிலும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. தொடர்ச்சியான துன்புறுத்தல் மூலம் எதிர்த்தரப்பினரை பயமுறுத்துதல் அல்லது தாழ்வாக உணரச் செய்தல்,உடல் அடிப்படையில் காயப்படுத்தல்,என்ற ஒன்றை மேற்கொள்கின்றனர்.



இந்த துன்புறுத்தலானது மொழிசார் துன்புறுத்தல், உடல் சார்ந்த துன்புறுத்தல், இணையவழித் துன்புறுத்தல் என்ற வகைகளை கொண்டதாக காணப்படுகிறது.

மொழி சார்ந்த துன்புறுத்தலை பார்க்கும்பொழுது தனிப்பட்ட, கீழ்ப்பட்ட நபரை தன்னுடைய வார்த்தைகளால் உளரீதியாக துன்புறுத்துதலைக குறிப்பதாகும். இந்த மொழி சார்ந்த துன்புறுத்தல்கள்,கிண்டல், அவமானப்படுத்தல்,பெயர் சூட்டுதல் போன்றவற்றின் மூலம் இடம் பெறுகிறது

இதன் மூலம் பாதிக்கப்படுபவர்கள் உளவியல் ரீதியாக அதிக தாக்கங்களை எதிர்கொள்கிறனர். உடல் சார்ந்த துன்புறுத்தலை பார்க்கும் பொழுது எதிர்தரப்பினரை காயம் அடையச் செய்யும் நோக்கத்தோடு மேற்கொள்ளப்படும், உடலியல் சார்ந்த வன்முறையை குறிப்பதாக காணப்படுகிறது. இது கூடுதலாக அடித்தல், தள்ளுதல் போன்ற செயல்முறைகள் மூலம் இடம்பெறுகின்றது.

உணர்ச்சி ரீதியாக துன்புறுத்தல் என்பதனை பார்க்கும் பொழுது இது தன்னைவிட கீழ்ப்பட்ட நபரை தாக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அவரை உணர்ச்சிரீதியாக காயப்படுத்தலை குறிப்பதாகும். அதாவது புறக்கணிப்பு,குழுவில் சேர விடாமை,சமூகவிலக்கல் போன்ற செயற்பாடுகள் மூலம் ஒரு நபரை உணர்ச்சி ரீதியாக காயப்படுத்தலை குறிப்பதாகும். இணையவழி துன்புறுத்தல் என்பது நேரடியாக துன்புறுத்துவதல்லாது இணையத்தின் மூலமாக மேற்கொள்ளப்படுவதாகும்.

இந்த துன்புறுத்தலானது, துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படும் தரப்பினரை உடல்,உள,சமூக ரீதியில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாக காணப்படுகிறது.இன்றைய நவீன யுகத்தில் இச்செயற்பாடானது எந் நேரமும் இடம்பெறக்கூடியதாக காணப்படுகிறது. இந்த துன்புறுத்தல்கள்






சமூக ஊடகங்களில் அவமானப்படுத்தல்,பொய்யான தகவல்களைப்பகிர்தல், தனிப்பட்ட தகவல்களை பகிர்வதன் மூலம் நபர்களை துன்புறுத்துதல் என்று வகைகள் பலவாராக காணப்படுகின்றன.இவை ஒவ்வொன்றும் மனிதர்களில் பலதரப்பட்ட அடிப்படையிலான பாதிப்புக்களை ஏற்படுத்த வல்லன.

இந்த துன்புறுத்தல் என்ற விடயம் தொடர்பான தரவுகளைப் பார்க்கும் பொழுது 2020 ஆம் ஆண்டு யுனெஸ்கோவின் தரவுகளின் படியும் உலக அளவில் மூன்றில் ஒரு பங்கு மாணவர்கள்,குறைந்தது ஒரு முறையாவது துன்புறுத்தலுக்கு உள்ளாகி உள்ளனர் என கூறுகிறது. அதேபோல 2024 ஆம் ஆண்டு யுனிசெப் இன் தகவலின்படி 13 தொடக்கம் 15 வயதுக்குட்பட்ட மாணவர்களில் சுமார் 50 வீதமான மாணவர்கள் பள்ளியில் அல்லது அதன் சுற்றுப்புறங்களில் சக மாணவர்களால் வன்முறை அனுபவித்துள்ளனர் என தெரிவிக்கிறது.

இவை 2020 மற்றும் 2024 ஆம் ஆண்டிற்கான உலக ரீதியான தகவல்களாக காணப்படுகிறது. இலங்கையில் தரவுகளை பார்க்கும் பொழுது 2016 ஆம் ஆண்டு யுனிசெப் அறிக்கையின் படி இலங்கையில் 13 தொடக்கம் 15 வயது மாணவர்களில் 39.4 வீதமான மாணவர்கள் ஒரு மாதத்தில் ஒருமுறையாவது துன்புறுத்தலுக்கு உட்படுகின்றனர் எனவும் 43.8 வீதமான மாணவர்கள் வருடத்தில் ஒரு முறையாவது துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றனர் எனவும் இவர்களில் 54.9 வீதமான மாணவர்கள் ஆண்களாக காணப்படுகின்றனர.



மேலும் 2024 ஆம் ஆண்டு கேகாலை கல்வி வளையத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி 12 தொடக்கம் 14 வயதுக்குட்பட்ட மாணவர்களில் 59 வீதமான மாணவர்கள் துன்புறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர் இவர்களில்



45.2 வீதமானவர்கள் மொழி ரீதியான துன்புறுத்தலுக்கும் 36.3 வீதமான மாணவர்கள் மொழி சார்ந்த துன்புறுத்தலுக்கும் 22 வீதமான மாணவர்கள் புரட்சிசார்த்தலுக்கும் 22.4 வீதமானவர்கள் உடல் ரீதியான துன்புறுத்தலுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர். மேலும் 2023 ஆம் ஆண்டு தகவல் படி 14 தொடக்கம் 14 வயது மாணவர்களில் 3.5வீதமானவர்கள் இணைய துன்புறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர்.

அண்மையிலும் கூட பல்கலைக்கழகங்களில் இப்பகுதி என்பது அதிகரித்த வண்ணமே உள்ளது. இந்த வருட ஏப்ரல் மாத இறுதியில் இரண்டாம் வருட சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவன் பகிடிவதையின் காரணமாக தற்கொலை செய்துள்ளார். இப்படியான நிலைமைகள்தான் இலங்கையிலும், உலக அளவிலும் காணப்படுகிறன.

இதற்கான தடுத்தல் செயற்பாடுகள் பலதரப்பட்டவை காணப்படுகின்ற பொழுதிலும்,இது நிகழ்ந்த வண்ணமே காணப்படுகிறது. பல்கலைக்கழகம் மற்றும் பாடசாலை மட்டங்களில் துன்புறுத்தல் தொடர்பான விழிப்புணர்வுகள் செய்வதோடு, சட்டதிட்டங்களையும் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். சமூக ஊடக பாவனை தொடர்பாக அக்கரையுடன் செயல்பட்டு சமூகத்தில் இடம்பெறும் இவ்வாறான செயற்பாடுகளை வெளிப்படையாக வெளிக்கொண்டுவரவேண்டும்.

மேலும் இந்த துன்புறுத்தல்களில் பாதிக்கப்படும் நபர்களிடையே உளவியல்சார் பிரச்சினைகள் ஏற்படுத்தப்படுகிறது, எனவே அவர்களுக்கான மனநல ஆலோசனை வழங்குவதோடு சமூக ஆதரவையும் வழங்க வேண்டும். அத்தோடு எமக்கோ எம்மைச்சார்ந்தவர்களுக்கோ மட்டுமல்லாது சமூகத்தில் யாருக்கேனும் இவ்வாறான பிரச்சனைகள் வரும் பொழுது சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு இவ்வாரான பிரச்சனைகளுக்கான தீர்வுகளை காண வேண்டியது இலங்கையின் பிரஜைகளான ஒவ்வொருவரின் மீதும் உள்ள கடமையாகும்.




யூதர்களைப் பற்றி பல எதிர்மறையான கருத்துக்கள் நிலவி வருகின்றன. யூதர்கள் இனவெறி பிடித்தவர்கள். தங்கள் தெய்வம் மட்டுமே உண்மையான தெய்வம் என்று கருதுபவர்கள். தங்கள் தெய்வத்துக்காக, தங்கள் தேசத்துக்காக எந்த எல்லைக்கும் போகிறவர்கள். உலகை ஆளுகை செய்கிறவர்கள். இல்லுமினாட்டிகள். உலகினை ஆளப்பிறந்தவர்கள் யூதர்கள் என்ற திமிர் பிடித்தவர்கள். பழிவாங்குபவர்கள்.. மோசமானவர்கள்.. வந்தேறிகள். இரத்த வெறி பிடித்தவர்கள். பாலஸ்தீன தேசத்தைப் பிடித்துக்கொண்டு, பாலஸ்தீனியர்களை சுட்டுக் கொல்பவர்கள்


இதெல்லாம் YouTube comments களில் நாம் படித்து அறிந்தது. (2 வருடங்களுக்கு முன்பு எடுத்த கருத்துக்கள் இவை. இப்பொழுது இன்னும் மோசமாக இஸ்ரேலைப் பற்றி பேசுகின்றனர்) இவைகள் எல்லாம் நம் தமிழ் மக்கள் கமெண்ட்களில் யூதர்களைப் பற்றிக் கூறிய வார்த்தைகள். உண்மையில் யூதர்கள் யார்? அவர்கள் கடந்து வந்த பாதைகள் என்ன?

தற்போதைய இஸ்ரேல் (After 1948)
இப்போது இருக்கும் இஸ்ரேல் தேசத்தின் வளர்ச்சிகளை முதலாவது நாம் காணலாம்.

1. கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளாக, தங்களுக்கென்று ஒரு தேசம்

இல்லாமல், பல தேசத்திலும் அடிமைப்பட்டு, சிறைபிடிக்கப்பட்டு, கொல்லப்பட்டு, அவமானப்பட்டு இருந்த மக்கள், தங்களுக்கு என்று ஒரு சுய தேசத்தை உருவாக்கி, அதில் இந்த 75 ஆண்டுக்குள்ளாக மாபெரும் புரட்சி செய்து, உலக நாடுகளை திரும்பிப் பார்க்க வைத்திருப்பது, இஸ்ரேலின் சிறப்புகளில் மிகச் சிறந்தது.

2. 1948ல் தான் இஸ்ரேல் என்ற நாடு உருவாகி, அதை சுதந்திர நாடு என்று பிரகடனப்படுத்தியதே மே14,1948 தான். அதற்கு அடுத்த நாளே, சுற்றிலும் இருந்த அரபு நாடுகள் சேர்ந்து, இஸ்ரேலின் மீது போர் தொடுத்தது. அப்போதைய இஸ்ரேலின் மக்கள் தொகை வெறும் ஐந்து லட்சம். சுற்றி இருந்த அரபு நாடுகளின் மக்கள் தொகை கிட்டத்தட்ட ஆறு கோடி. அதாவது 120 மடங்கு அதிகம் மக்கள் தொகை கொண்ட அரபு நாடுகள், வெறும் ஒருநாள் வயது குழந்தையான இஸ்ரேலை சுற்றி படையெடுத்தது.



இஸ்ரேல் என்ற பெயர், உலக வரைபடத்தில் இல்லாமல் போக வேண்டும் என்பதே அவர்களின் நோக்கம். இந்தப் போரைப் பற்றி விரிவாக வரும் பகுதிகளில் படிக்கலாம். ஆனால் அவ்வளவு படைவீரர்கள் சூழ்ந்து நின்ற போதிலும், இஸ்ரேல் தனது படைவீரர்கள் பலரை இழக்கக் கொடுத்தாலும், அந்தப் போரில் வெற்றி பெற்றது. அதுதான் இஸ்ரேல். எட்டு முறை அண்டை நாட்டினருடன் போரிட்டாலும், ஒரு முறை கூட தோற்காத நாடு என்று பெருமையுடன் காணப்படுவது இஸ்ரேல்.

3. பாலஸ்தீனியர்கள் மட்டுமே கிட்டத்தட்ட 170 முறை, இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். யாரிடமும் தோற்றுப் போகாத நாடாக, எதிர்ப்பவர்களின் கண்களில் விரல் விட்டு ஆட்டிக் கொண்டிருப்பது இஸ்ரேல்.



4. படித்தவர்கள் அதிகம் காணப்படும் நாடு இஸ்ரேல். கிட்டத்தட்ட 99 சதவீத பேர் படித்தவர்களாக இருப்பதுடன்,

அதிக அளவு போஸ்ட் கிராஜுவேட் (PG) முடித்தவர்கள் கூட இஸ்ரேலில் தான் இருக்கிறார்கள்.

5. தனி நாடாக இஸ்ரேல் உருவான பின்னர் 13 பேர் அறிவியலில் நோபல் பரிசு பெற்றுள்ளனர். உலக அளவில் டாப் யூனிவர்சிட்டிஸ் என்ற வரிசையில், முதல் 100 இடத்தில், மூன்று இஸ்ரேலிய கல்லூரிகள் உள்ளன.

6. சாட்டிலைட் சொந்தமாக தயாரித்து அனுப்பும் 10 நாடுகளில், இஸ்ரேலும் ஒன்று. இதுவரை 13 சாட்டிலைட்டுகள் அனுப்பப்பட்டு இருக்கிறது. நமது இந்தியா கூட ஒரு சாட்டிலைட் இஸ்ரேலிடம் இருந்து வாங்கி, அதைத்தான் பிற நாடுகளை கண்காணிப்பதற்காக அனுப்பி இருக்கிறோம்.

7. பள்ளிப் பிள்ளைகள் தயாரித்த சாட்டிலைட்டை, வானிற்கு அனுப்பிய முதல் நாடு இஸ்ரேல் தான். இதிலிருந்து அறிந்து கொள்ளலாம், அவர்களின் குழந்தைகள் எவ்வளவு அறிவாளிகளாக இருக்கிறார்கள் என்று.

8. குடிப்பதற்கு தண்ணீரே இல்லாத நாடு என்றால் அது இஸ்ரேல்தான். ஆனால் அவர்கள் பாலைவனத்தில் கூட விவசாயம் செய்கிறார்கள். எப்படி? கடல் தண்ணீரை சுத்திகரித்து, குடிநீராக மாற்றி ,அதைத்தான் உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

9. கழிவுநீரை அதிகமாக மறுசுழற்சி செய்கிற நாடும் இஸ்ரேல்தான். வீடுகளில் இருந்து வரும் 60% கழிவுநீரும், / பேக்டரிகளில் இருந்து வெளிவரும் 85 சதவீத தண்ணீரையும், சுத்திகரித்து, அதிலிருந்து வரும் தண்ணீரை 97% விவசாயத்திற்கு உபயோகித்துக் கொண்டிருக்கின்றனர். விவசாயத்திற்கு அவர்கள் உபயோகிக்கிற நீரில் 55 சதவீத தண்ணீர் Drainage water.



10. தண்ணீரை எப்படி உபயோகப்படுத்த வேண்டும் என்பதைத் தெரிந்தவர்கள் இஸ்ரவேலர்கள் தான். அவர்கள் தான்



சொட்டுநீர் பாசனம் முறையை கண்டுபிடித்தவர்கள்.

11. உலக அளவில் பால் உற்பத்தியில் முதலிடம் பிடிப்பதும் இஸ்ரேல்தான். அதிகளவு பால் உற்பத்தி பண்ணுகிற மாடு இஸ்ரேலில் தான் கிடைக்கும்.

12. உலகிலேயே மியூசியம் அதிகம் உள்ள நாடு இஸ்ரேல் தான். உலகிலே அதிக ஆர்கெஸ்ட்ரா உள்ள நாடும் இஸ்ரேல்தான்.

13. இஸ்ரேல் நாட்டில் மட்டும் 137 பீச் இருக்கிறது.

14. அதிக வரலாற்று சிறப்புமிக்க இடம் கொண்ட நாடு இஸ்ரேல் தான். எருசலேமில் மட்டும் கிட்டத்தட்ட 2000 இடங்கள் வரலாற்று இடங்களாக உள்ளது.



15. என்பது அனைவருக்கும் தெரியும் (8848m). World lowest point எது என்று கேட்டால், அது இஸ்ரேலில் உள்ள Dead sea தான். 1315m low ஆக இருக்கும். அங்குள்ள உப்புத்தன்மை அதிகம் என்பதால், அதில் சுலபமாக மிதக்க முடியும்.

16. நாம் கையில் வைத்திருக்கிற Smartphonef;F Foundation போட்டது இஸ்ரேல் தான். Israely; உள்ள Motorola company d; Research and Development engineers> இன்றைக்கு உபயோகிக்கும் மொபைல் போன்களுக்கு அடித்தளம் போட்டவர்கள்.

17. Google> Apple> Microsoft> Intel இப்படி பெரிய நிறுவனங்களுக்கு Research and Development team இன்றும் இஸ்ரேலில் இருக்கும். டெக்னாலஜியில் அதிகம் பெயர் பெற்ற நாடு இஸ்ரேல்.

18. ஒரு வருடத்துக்கு மட்டும் கிட்டத்தட்ட 1000 கடிதங்கள் கடவுளுக்கு (To God) என்று பெயர் போட்டு வரும். இதை டீல் செய்வதற்காகவே ஒரு தனி டிபார்ட்மெண்ட் போஸ்டல் துறையில் உள்ளது.




19. என்று ஒரு சுடுகாடு இஸ்ரேலில் உள்ளது. இதுவரை அது சுடுகாடாக மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. பொதுவாக ஒரு இடம் சுடுகாடாக பயன்படுத்தப்படும். பின்னர் அந்த இடம் வேறொரு பயன்பாட்டில் வந்து சேரும். அல்லது வேறொரு பயன்பாட்டில் இருந்த இடம், சுடுகாடாக மாறும். ஆனால் இஸ்ரேலிலுள்ள இந்த ஒரு இடம் மட்டும் , உலகிலே மிகப் பழமையான சுடுகாடு என்ற பெருமையை பெற்றது.

20. மிகப் பழமையான பட்டணங்கள் பட்டியலில், ஜெருசலேமும் ஒன்று. ஆனால் இந்த ஜெருசலேம் இரண்டு முறை முற்றிலுமாக அழிக்கப்பட்ட நகரம். அதே போல 23 முறை எதிரி படையால் சூழப்பட்டிருந்தது. 53 முறை எதிரியால் தாக்கப்பட்டிருந்தது. 44 முறை பிடிக்கப்பட்டுள்ளது. இத்தனையும் தாண்டி இன்றும் எருசலேம் என்ற பட்டணம் அங்கே காணப்படுவது ஒரு சிறப்பு தானே..

இஸ்ரேலின் விநோதமான சட்டங்கள்

1. இஸ்ரேலில் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, கட்டாயமாக இரண்டு வருடம் ராணுவத்தில் பணியாற்ற வேண்டும். ராணுவத்தில் பெண்களைக் கொண்ட நாடு என்ற பெருமையும் இஸ்ரேலுக்கு உள்ளது.

2. நமது குழந்தைகள் பார்க்கும் கார்ட்டூனில் அதிக அளவு கார்ட்டூனை தயாரிப்பவர்கள் யூதர்கள் தான். ஆனால் இஸ்ரேல் நாட்டில் குழந்தைகள் கார்ட்டூன் பார்ப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. குழந்தைகளின் மூளை மழுங்கி விடும் என்பதால், 15 வயது வரை கார்ட்டூன் பார்க்க கூடாது என்ற சட்டம் இஸ்ரேலில் இருக்கிறது.

3. பேருந்து நிலையமாக இருக்கட்டும் ரயில் நிலையமாக இருக்கட்டும் எங்கு சென்றாலும் குனிந்த தலை நிமிராமல் மொபைல் போனை

நோண்டிக் கொண்டிருக்கும் மக்கள் நாம். ஆனால் இஸ்ரேலில், ஒவ்வொரு பேருந்து நிலையத்திலும் ஏசி உடன் கூடிய லைப்ரரி உள்ளது. பேருந்துக்காக காத்து நிற்கிறவர்கள், அந்த நேரத்தில் அந்த நூலகத்தை உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

4. இஸ்ரேலில் அரசியலுக்கு வரவேண்டும் என்றால், அவர்கள் ராணுவத்தில் மிக முக்கிய பொறுப்பாளராக பணியாற்றி இருக்க வேண்டும் என்பது, அங்குள்ள வினோதமான ஒரு சட்டம்.

5. Highway roady; பைக்கையோ காரையோ நிறுத்தி லிப்ட் கேட்பது மிகப்பெரிய குற்றம். வழிப்பறி கொள்ளைகள் நிகழாமல் தடுக்க இந்த சட்டம் நடைமுறையில் உள்ளது.

6. ஒரு ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு, டிப்ஸ் கொடுக்கவில்லை என்றால், நீங்கள் செல்லும் போது உங்களை நிறுத்தி டிப்ஸ் தருமாறு கேட்பார்கள்.

7. இஸ்ரேலில் புகை பிடிப்பது மரண தண்டனைக்குரிய குற்றம். அதில் இருக்கும் நிக்கோட்டின், டிஎன்ஏவில் கலப்பதால், அடுத்த தலைமுறையின் மூளை பாதிக்கப்படும். எனவே அவர்கள் பொது இடத்திலோ, வெளியிலோ புகை பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். (இப்பொழுது நன்றாகவே குடிக்கிறார்கள்)

ஆனால் உலகின் மிகப்பெரிய சிகரெட் கம்பெனி ஒரு யூதருடையது. இரண்டு வருடம் ராணுவத்தில் பணியாற்றி முடிக்கும் வீரர்கள், உடனடியாக இந்தியாவுக்கு சுற்றுலா வருவார்கள். இந்தியாவில் உள்ள கோவாவில், ஓய்வு எடுத்தபடி, சிகரெட் புகையை இழுத்து மூச்சு வாங்குவார்கள். அதுதான் அவர்கள் வாழ்க்கையில் முதலாவது பிடிக்கும் சிகரெட், அதே போல் அவர்கள் வாழ்க்கையில் கடைசியாக குடிக்கும் சிகரெட்டும் இந்தியாவில் தான் குடிப்பார்கள்.

ராணுவத்தில் பணியாற்றியதால் ஏற்பட்ட மன அழுத்தம், வேலைப்பளு அனைத்தையும் தோற்கடிக்க, இந்தியாவுக்கு சுற்றுலா வந்து, நன்கு ஓய்வெடுத்து விட்டுத்தான், தங்களது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவார்கள் யூதர்கள். (ஒரு காலத்தில் இருந்தது. இப்பொழுது நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ஆனால் கட்டுப்படுத்த முடியவில்லை.)

யூத பெற்றோர்கள்:

உலக அளவில் பதினைந்து சதவீதம் கூட மக்கள்தொகை இல்லாதவர்கள் யூதர்கள், உலக அளவில் தொழில்நுட்பம், இசை, விஞ்ஞானம் இவற்றில் 70% யூதர்களாகத் தான் இருப்பார்கள். இதற்கு பெற்றோரின் வளர்ப்பும் மிகப்பெரிய காரணம். குழந்தை வளர்ப்பில் மிக முக்கிய பங்கு வகிப்பவர் தாய் என்பது நம் அனைவருக்கும் தெரியும்.

ஆனால் இஸ்ரேலில் குழந்தை வளர்ப்பில் முக்கிய பங்கு ஆற்றிக் கொண்டிருப்பவர் தாய் என்பதை வெளிப்படையாகக் காணலாம். தன் வயிற்றில் கரு உருவாவது தெரிந்த உடனேயே, அந்தத் தாய் எல்லா வேலையும் ஒதுக்கி விட்டு, Maths puzzle போட்டுக் கொண்டே இருக்க வேண்டும். தாயின் மூளை தூண்டப்படும் போது, குழந்தையின் மூளையும் தூண்டப்படும் என்பது அவர்களது எண்ணம்.

அறிவியல் பூர்வமாக அந்த கருத்தும் சரியே. கரு உருவான உடன், அந்த தாய் தூக்கம் வரக் கூடிய எந்த ஒரு பொருளையும் சாப்பிடாமல், தன்னை சுறுசுறுப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். எப்போதும் இசை வாசித்துக் கொண்டிருக்க வேண்டும். அவர்கள் சாப்பாட்டிலும் அதிகமாக மீன் எடுத்துக் கொள்வார்கள். மீனும் இறைச்சியும் ஒரே நேரத்தில் எடுத்துக் கொள்வது அந்த அளவுக்கு சத்து அல்ல என்று கூறும் யூதர்கள், இறைச்சியை யஎழனை செய்து விட்டு, அதிகமாக மீனைத்தான் சமைப்பர். அதுவும் மீனைப் பொறித்து உண்ணாமல், வேக வைத்துத் தான் சாப்பிடுவர். நிறைய nuts, vegetables எடுத்துக் கொள்வார்கள்.



யூதக் குழந்தைகள்:

குழந்தைகள் சிறு வயதிலிருந்து இசை வாசிக்கப் பழக வேண்டும். கண்டிப்பாக குழந்தைகள் கார்ட்டூன் பார்க்கக் கூடாது.

15 வயது வரை உள்ள குழந்தைகள் கார்ட்டூன் பார்ப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. குழந்தைகளின் மூளையைத் தூ ண்டும் வில் வித்தை, துப்பாக்கி சுடுதல் போன்றவை, கட்டாயமாக குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்கப்படும். ஆறாம் வகுப்பு வரை குழந்தைகளுக்கு வணிக கணிதவியல் படிப்பு கட்டாயமாக சொல்லித் தரப்படும். அதன் பின்னர் அவர்கள் என்ன துறையில் படிக்க விரும்புகிறார்களோ, அந்தத் துறைக்கான பாடங்கள் மட்டுமே சொல்லித் தரப்படும்.

நம்மைப் போல் எல்லா பாடங்களையும் அவர்கள் படிப்பது கிடையாது. போர்த்தளவாடம், மருத்துவம், தொழில்நுட்பம். இதுதான் அவர்களது முக்கிய பாடங்கள். இதை நோக்கித்தான் அவர்களது கவனம் சென்று கொண்டே இருக்கும்.

முக்கியமாக வணிகவியல் எடுக்கும் ஆசிரியருக்கு, அங்கே மரியாதை அதிகம். வணிகவியலில் ஒரு பத்து பேர் சேர்ந்து கூட்டாக இருப்பார்கள். அந்த பத்து மாணவர்களும் சேர்ந்து, ஒரு business செய்து, பத்து மில்லியன் அமெரிக்கன் டாலரை சம்பாதித்துக் கொடுக்க வேண்டும். அப்படி சம்பாதித்தால் மட்டுமே அவர்களுக்கு டிகிரி முடித்ததற்கான சான்றிதழ் கொடுக்கப்படும். இதனால் தான் எழுபது சதவீத உலகமே யூதனின் கையில் இருக்கிறது. Cococola> Dell> Apple> Motorola என்று முக்கிய நிறுவனங்கள் யூதனுடையதாகத்தான் இருக்கும்.

மாணவர்கள் பிசினஸ் செய்வதற்கு பணம் தேவை. பணம் யார் கொடுப்பார்கள்? நியூயார்க்கில் யூதர்களுக்கென்று ஒரு வர்த்தக நிறுவனம் உள்ளது. அங்கே போய் மாணவர்கள், எனக்கு இந்த ஐடியா இருக்கிறது. நான் இப்படி ஒரு ப்ராஜெக்ட் செய்யப் போகிறேன் என்று சொன்னால், வட்டி இல்லா கடன் அந்த நிறுவனம் கொடுக்கும். அதனால் தான் அவர்களால் அதிக பிசினஸ் செய்ய முடிகிறது.

மருத்துவம் படிக்கிற மாணவர்களுக்கும் கடன் வழங்கப்படும். அவர்கள் மருத்துவர்கள் ஆன பின்பு, தன்னை நிலைப்படுத்திக் கொண்டு, மூன்று வருடங்களுக்குள் ஒரு நல்ல நிலைக்கு வர வேண்டும். மூன்று வருடம் முடிந்த பின்னர், அவர்கள் அந்த வட்டி இல்லா கடனைத் திரும்ப செலுத்தலாம்.



நி. கோபிநாத்

# உரிமையற்று உயரும் மலையகம் காணியின் கேள்விக்குள் அடையாளத் தேடல்.

மலையக மக்களின் அடிப்படை உரிமைகளில் காணி உரிமையும் முக்கியமானதொரு அம்சமாகும். நீண்ட காலமாகவே நிலத்திற்கான உரிமையற்ற ஒரு சமூகமாக இருப்பதோடு எமது தலைமுறைக்கே நில உரிமை என்பது மறுக்கப்பட்டதாகவே காணப்படுகின்றது. அதற்கான வெளிச்சம் இதுவரையிலும் எட்டப்படவில்லை என்பதே நிதர்சனமான உண்மை.

மனிதர்கள் காலடி படாத காடுகளை அழித்து அதில் பெருந்தோட்டங்களை உருவாக்கி இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு உழைப்பை வழங்கிய எம் மக்களின் விழித்தோன்றல்களுக்கு அடிப்படையான காணி உரிமை என்பது மறுக்கப்பட்ட விடயமாக காணப்படுகின்றது. உண்மையிலேயே இது நீதியானதா?, ஏன்? இதற்கான நீதியை நிலைநாட்ட அரசாங்கங்களும் பெருந்தோட்ட கம்பெனிகளும் முன்வருவதில்லை என்பது கேள்விக்குறிய விடயமாகும்.

நீண்ட காலமாகவே சட்டம், போக்குவரத்து, கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பல அடிப்படை வசதிகளில் பின்தங்கிய நிலை காணப்பட்டு வரும் இந்த சமூகத்திற்கு, காணி உரிமை மறுக்கப்படுவது மேலும் அச்சமூகத்தின் இருப்பை நிலைக்குலையச் செய்வதாகக் காணப்படுகின்றது. எமது வாழ்விடங்கள், பயிரிடங்கள் என்பவை உரிமையற்று இருப்பதால் எப்போது வேண்டுமானாலும் இழக்கப்படும் அபாயத்தில் உள்ளது. இது எங்கள் வாழ்வில் ஒரு நிலைத்தன்மையை ஏற்படுத்துவதில் பெரும் தடையாக உள்ளமை துரதிஸ்டவசமான விடயமாகும்.



மலையக மக்களின் அடிப்படை உரிமைகளில் காணி உரிமையும் முக்கியமானதொரு அம்சமாகும். நீண்ட காலமாகவே நிலத்திற்கான உரிமையற்ற ஒரு சமூகமாக இருப்பதோடு எமது தலைமுறைக்கே நில உரிமை என்பது மறுக்கப்பட்டதாகவே காணப்படுகின்றது. அதற்கான வெளிச்சம் இதுவரையிலும் எட்டப்படவில்லை என்பதே நிதர்சனமான உண்மை. மனிதர்கள் காலடி படாத காடுகளை அழித்து அதில் பெருந்தோட்டங்களை உருவாக்கி இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு உழைப்பை வழங்கிய எம் மக்களின் விழித்தோன்றல்களுக்கு அடிப்படையான காணி உரிமை என்பது மறுக்கப்பட்ட விடயமாக காணப்படுகின்றது. உண்மையிலேயே இது நீதியானதா?, ஏன்? இதற்கான நீதியை நிலைநாட்ட அரசாங்கங்களும் பெருந்தோட்ட கம்பெனிகளும் முன்வருவதில்லை என்பது கேள்விக்குறிய விடயமாகும்.

நீண்ட காலமாகவே சட்டம், போக்குவரத்து, கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பல அடிப்படை வசதிகளில் பின்தங்கிய நிலை காணப்பட்டு வரும் இந்த சமூகத்திற்கு, காணி உரிமை மறுக்கப்படுவது மேலும் அச்சமூகத்தின் இருப்பை நிலைக்குலையச் செய்வதாகக் காணப்படுகின்றது. எமது வாழ்விடங்கள், பயிரிடங்கள் என்பவை உரிமையற்று இருப்பதால் எப்போது வேண்டுமானாலும் இழக்கப்படும் அபாயத்தில் உள்ளது. இது எங்கள் வாழ்வில் ஒரு நிலைத்தன்மையை ஏற்படுத்துவதில் பெரும் தடையாக உள்ளமை துரதிஸ்டவசமான விடயமாகும்.

அதே போன்று, 2000 ஆம் ஆண்டில், மேல் கொத்மலை நீர் மின்சார திட்டத்துக்காக அப்பிரதேச மக்களை வெளியேற்றும் முன்னெடுப்பு தொடர்ச்சியான மக்கள் போராட்டம் காரணமாக கைவிடப்பட்டது. 2014 ஆம் ஆண்டு பதுளை மாவட்டத்தின் ஹுபுத்தளை பிரதேசத்தில் மேரியாவத்த பகுதியில் இடம்பெற்ற நிலச்சரிவு பேரழிவின் பின்னர், மலைநாட்டில் வாழும் மக்களுக்கு குடியிருப்புக்கு பொருத்தமான இடங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க கோரிக்கை நாட்டின் அனைத்து பாகங்களில் இருந்தும் முன்வைக்கப்பட்டது.



1972 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க காணி சீர்திருத்த ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 3(b) இன் பிரகாரம் பெருந்தோட்டங்களில் லயன் வீடுகளில் குடியிருக்கும் குடும்பங்களுக்கு 20 பேச்சர்ஸ் அளவிலான காணி ஒதுக்கப்படுவது. உறுதி செய்யப்பட்டுள்ளது. எனினும் தற்தபோதைய அரசாங்கம் மலையக மக்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 10 பேச்சர்ஸ் துண்டு அளவான காணியை மாத்திரம் வழங்க நடவடிக்கை எடுத்து வருவதாக அறிய முடிகிறது.

நாட்டில் காணி இல்லாத பிரஜைகளுக்கு காணி வழங்குவதற்காக காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் (1935), அரச காணிகள் கட்டளைச் சட்டம் (1947), காணி கையளிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (1979), காணி சீர்திருத்த ஆணைக்குழு சட்டம் ஆகிய சட்டங்கள் ஊடாக அனுமதிப்பத்திரம் (permit) அளிப்புப் பத்திரம் (grant) மற்றும் அறுதியீட்டு உறுதியூடாக (deed of transfer) காணி உரிமை வழங்கப்படுகிறது.

எனினும் மலையக மக்களுக்கு இந்த சட்டங்களில் ஏற்புடைய சட்டங்களைப் பயன்படுத்தி அனுமதிப்பத்திரமோ, அளிப்புப் பத்திரமோ, அறுதியீட்டு உறுதியோ இதுவரை வழங்கப்படவில்லை. நாட்டில் காணியற்ற பிரஜைகள் உரிய அரச அதிகாரிகள், அரசு நிறுவனங்களின் மூலம் மற்றும் காணி கச்சேரி ஊடாக பதிவு

செய்யப்படுகின்றனர். எனினும் மலையக மக்கள் தொடர்பில் அவர்களின் குடியிருப்பு மற்றும் காணி விவகாரங்களை பெருந்தோட்ட கம்பனிகளும், கம்பனிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் கம்பனி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியமும் (PHDT - Trust) தொழிற்சங்கங்களும் மேற்கொள்கின்றன.

கிரமங்களில் வாழும் மக்களுக்கு வசிப்பதற்காக 20 பேச்சர்ஸ் அல்லது அதற்கு அதிகமான அரசக் காணிகள் சட்ட ரீதியாக உரித்துடன் வழங்கப்படுகின்றன. எனினும், மலையக மக்களுக்கு வசிப்பதற்காக 1995 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை ஒரு

குடும்பத்துக்கு 7 பேச்சர்ஸ் அளவு காணியே வழங்கப்பட்டுள்ளது. அவையும் சட்ட உரித்து அற்றவைகளாகும். மேலும் மலையக மக்களுக்கு பெருந்தோட்ட காணிகளை வழங்குவதற்கு மாத்திரம் பெருந்தோட்ட கம்பெனிகளுக்கும் அரச நிறுவனங்களுக்கும் இடையே காணப்படுகின்ற குத்தகை ஒப்பந்தம் காரணமாக காணி உரிமை மறுக்கப்பட்டு வருகின்றது.

அத்தோடு பெருந்தோட்ட கம்பெனிகளுடன் எவ்வித தொடர்புமற்ற காணி சீர்திருத்த ஆணைக்குழு, (JEDB), (SLSPC), (TRI) ஆகிய அரச நிறுவனங்கள் மற்றும் பெருந்தோட்ட அமைச்சின் கட்டுப்பாட்டில் உள்ள பெருந்தோட்ட காணிகளை அவற்றில் வாழும் மலையக மக்களுக்கு குடியிருப்பு தேவைக்காக அனுமதிப்பத்திரம் , அழைப்பு பத்திரம் , அளிப்பு பத்திரம், அறுதியீட்டு உறுதி ஊடாக வழங்குவதற்கு இதுவரையில் எந்த ஒரு முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை என்பதே உண்மையாகும்.

காணி உரிமைகள் மற்றும் ஏனைய உரிமைகளுக்காக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களில் எமது முன்னோர்கள் மேற்கொண்ட தியாகங்கள் அளப்பரியன. மலையக மக்களின் காணி உரிமைக்கான அங்கீகாரத்தை பாதுகாக்க பல ஆர்ப்பாட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதும், அவர்களின் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளதுடன் அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும். மீறல்கள் தொடர்ந்த வன்னமேயுள்ளன. எனவே, இந்தக் கோரிக்கை நாட்டின் தேசிய உரையாடலில் உள்ளடக்கப்படும் ஒரு தேவை தற்போது எழுந்துள்ளது.

எமது நாட்டில் பிரஜைகளுக்காக குடியேற்ற திட்டங்கள் உருவாக்கப்பட்டு புதிய கிராமங்கள் அமைக்கப்படும் போது ஏனைய எல்லா காரணிகளுக்கு அப்பால் பிரஜைகளின் குடும்ப பாதுகாப்பு நலன் மற்றும் பொருளாதார சுபிட்சம் என்பவற்றுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. எனினும் மலையக மக்களுக்கு குடியிருப்புக்காக காணி வழங்கப்படும் பொழுது மாத்திரம் நம் மக்களின் உழைப்பால் உருவாக்கப்பட்ட தேயிலைச் செடிகளுக்கும் ரப்பர் மரங்களுக்கும் அம்மக்களை விட அதிக மதிப்பு வழங்கப்பட்டு தேயிலைச் செடிகளையும் ரப்பர் மரங்களையும் காப்பாற்றுவதாக கூறி அவர்கள் தொடர்ந்து லயங்களிலே வாழ்வது உறுதி செய்யப்படுகின்றது.

இலங்கையில் வாழும் எல்லாப் பிரஜைகளுக்கும் அரசு காணி வழங்கவில்லை என்பது உண்மையென்ற போதும் தனது சொந்த வருமானத்தில் கொள்வனவு செய்ய முடியாத ஏக பெரும்பான்மை பிரதிகளுக்கு காணி வழங்கி அவர்களின் நில உரிமையும் இருப்பையும் அரசு உறுதி செய்துள்ளது. தொடர்ந்தும் செய்யப்பட்டு வருகின்றது. எனினும் வரலாறு நெடுகிழும் ஏறத்தாழ மலையக மக்கள் அனைவருக்கும் காணி உரிமை மறுக்கப்பட்டமையும் அதன் காரணமாக மிக அடிப்படை உரிமையான முகவரியை கூட பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். ஆரம்பத்தில் தோட்ட சொந்தக்காரர்களாக இருந்தவர்கள் வழங்கிய முகவரியை மலையக மக்கள் சுமந்து கொண்டிருக்கின்றனர். என்பதே நிதர்சனமான உண்மை.

மலையக சமூகத்தின் காணி உரிமைகளை உறுதி செய்வதற்காகவும் காணியற்றவர்களுக்காக காணிகளைக் கோருவதற்காக ஒத்த சிந்தனையுள்ளவர்களை ஒன்று திரட்டவும் ஒரு தேசிய தினம் பிரகடணப்படுத்தப்பட வேண்டும். என மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கம் (MPPLR) நீண்ட காலமாக கோரி வருகின்றது. மலையக மக்களின் காணி பிரச்சினை இன்னும் ஒரு கொள்கை ரீதியில் தேசிய வேலைத் திட்டத்துடன் முன்னெடுக்கப்படாத நிலையில் இ தற்போது அதற்கான அழுத்தங்கள் பாரியளவில் எழுந்திருப்பது முக்கியமான விடயமாகும். அந்த வகையில் மலையக மக்களுடைய காணிக்கான போராட்டமும் அதன் வரலாறும் மிக பழமை வாய்ந்ததாக உள்ளது. மலையக மக்களுடைய காணிக்கான போராட்டம் இந்த நாடு சுதந்திரம் பெருவதற்கு முன்பதாகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அது வரலாற்று மற்றும் சரித்திரமிக்க போராட்டம் என்பது தற்போது வெளிக் கொண்டு வரப்பட்டுள்ளது.


காணி உரிமை இல்லாத காரணத்தினால் மலையக சமூகத்தில் வாழும் ஒரு குடிமகனுக்கு தன்னுடைய வீட்டினை புணர்நிர்மாணம் செய்யும் பொழுதும் சரி அல்லது வீட்டின் ஒரு பகுதியை நிர்மாணிக்கும் பொழுதும் சரி தோட்ட அதிகாரிகளின் அனுமதியை பெற வேண்டிய சூழ்நிலை காணப்படுகிறது. அத்துடன் வீட்டு தோட்டங்களில் ஒரு மரங்களை நடுவதாக இருந்தாலும் சரி அடிப்படை வசதியான கழிப்பறை ஒன்றை அமைப்பதாக இருந்தாலும் தோட்ட அதிகாரிகளை நாட வேண்டிய ஒரு சூழ்நிலையையே காணி உரிமை இல்லாத காரணத்தால் நாங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். இதற்கான தீர்வு

எமக்கு எட்டப்பட வேண்டும்?

மலையக மக்கள் பல்லாண்டுகளாகவே காணி உரிமையின்றி வாழ்ந்துவரும் ஒரு சமூகமாகத் திகழ்கின்றனர். நிலம் என்பது வாழ்க்கையின் அடித்தளமான மூலதனமாக இருக்கின்ற நிலையில், எங்களது தலைமுறைகளுக்கு நில உரிமை என்பது எப்போதும் எட்டாத கனவாகவே இருந்து வருகிறது. இது ஒவ்வொரு தலைமுறையிலும் வாழ்வாதார பாதுகாப்பு, சமூக மதிப்பு மற்றும் அரசியல் அடையாளம் ஆகியவற்றில் ஒரு பெரும் பின்னடைவை ஏற்படுத்தி வருகிறது.

எமக்கான உரிமைகள் பல்வேறு விதங்களில் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் நிலையிலும் கூட இன்று மலையக சமூகம் ஏதோ ஒரு வகையில் வளர்ச்சி பாதையை அடைந்துள்ளது. எமக்கான உரிமைகள் சரியாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தால் இன்றைய மலையக சமூகம் எட்டமுடியாத வளர்ச்சியை சந்தித்திருக்கும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. பல்வேறு துன்பங்களுக்கும் அடிமைத்தனங்களுக்கும் மத்தியிலே மலையக சமுகம் இன்று சமூகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. அது மேலும் உறுதி செய்யப்பட வேண்டும் என்றால் எமக்கான உரிமைகள் நிலை நாட்டுவதில் உள்ள அரசியல் தலையீடுகள் புறக்கணிக்கப்பட வேண்டும்

மலையக மக்களின் காணி உரிமை என்பது ஒரு சமூக நியாயம் மட்டுமல்ல, மனித உரிமையாகவும் கருதப்பட வேண்டும். இந்த உரிமையை சட்டபூர்வமாக உறுதி செய்யாத வரை, எங்கள் தலைமுறைகளுக்கு ஒளிமிக்க எதிர்காலம் என்பது வெறும் கனவாகவே தொடரும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துமில்லை.



# அபயம் அறக்கட்டளையினால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அதிநவீன கட்புல சோதனை இயந்திரம் வழங்கி வைப்பு



மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அபயம் அமைப்பினால் 12.5 மில்லியன் ரூபாய் பெறுமதியான (Visual Field Analyzer) கட்புல சோதனை இயந்திரம் மட்டக்களப்பு போதனை வைத்தியசாலைக்கு நன்கொடையாக கடந்த வியாழக்கிழமை (26.06.2025) வழங்கி வைக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை கண் சத்திர சிகிச்சை பிரிவில் நீண்ட கால தேவைப்பாடாகவிருந்து வந்த குறித்த கட்புல சோதனை இயந்திரத்தை, கண் சத்திர சிகிச்சை நிபுணர் மற்றும் வைத்தியசாலை பணிப்பாளர் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க அபயம் அமைப்பு வழங்கி வைத்துள்ளது.

இந்நிகழ்வில் கண்சத்திர சிகிச்சை நிபுணர் , வைத்தியசாலை பணிப்பாளர், பிரதிப்பணிப்பாளர் மற்றும் அபயம் அமைப்பினரும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது கண்சத்திரசிகிச்சை நிபுணர் கூறுகையில், மிக நீண்ட கால தேவைப்பாடாக இருந்து வந்த இந்த பெறுமதியான அதிநவீன சோதனை இயத்திரத்தினை வழங்கிய அபயம் அமைப்பினருக்கு நன்றி தெரிவித்ததோடு இவ்வியந்திரத்தின் பயன்பாடு அளப்பரியது எனவும் தெரிவித்திருந்தார்.

இலண்டனனை தலைமையிடமாக கொண்ட அபயம் அமைப்பானது எமது மண்ணின் கல்வி மற்றும் சுகாதார மேம்பாட்டிற்காக காத்திரமான பங்களிப்பினை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.








# மறுக்கப்பட்ட இனத்தில் இருந்து உருவான தலைவன் தெம்பா பவுமா



தென் ஆப்பிரிக்கா அணியின் சமீபத்திய வெற்றி ஒரு சாதாரண விளையாட்டு செய்தியாக மட்டும் பார்க்கப்பட முடியாது. இது வரலாற்று நீதியின் பிரதிபலிப்பாகவும், சமூக மாற்றத்தின் அடையாளமாகவும் உள்ளது. 27 ஆண்டுகளுக்குப் பிறகு தென் ஆப்பிரிக்க ஆடவர் அணி ஒரு ஐ.சி.சி கோப்பையை வென்றது. கிரிக்கெட்டின் மெக்கா என்று அழைக்கப்படும் லண்டனில் உள்ள லார்ட்ஸ் மைதானத்தில் ஆஸ்திரேலியாவை ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி உலக டெஸ்ட் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. இந்த வெற்றியின் முக்கியத்துவம், இந்த அணியின் கேப்டனாக இருந்தவர் தெம்பா பவுமா என்பவர் கருப்பினத்தை சேர்ந்தவர் என்பதில்தான் உள்ளது.

தெம்பா பவுமா கோப்பையை ஏற்ற போது, அந்த தருணத்தில் கருப்பினத்தவருக்கு உலக அரங்கில் கிடைத்த மதிப்பும், வரலாற்றில் நீண்ட காலம் புறக்கணிக்கப்பட்ட ஒரு சமூகத்தின் தலைவன் உலகத் தரத்தில் வெற்றி பெறும் தருணமும் ஒன்றாக காணப்பட்டது. ஒரு காலத்தில் தென் ஆப்பிரிக்காவில்

கருப்பினத்தவர் கிரிக்கெட் போல ஒரு விளையாட்டில் தலைவராக வருவார் என யாரும் நம்பியதில்லை. அவர்களின் சமூக நிலைமையால் கூட அவர்களுக்கு கிரிக்கெட் பேட்டைத் தொடும் வாய்ப்பே இல்லை. ஆனால் இன்று அவர்கள் கேப்டனாக விளங்குவது, தென் ஆப்பிரிக்காவின் வரலாற்று பயணத்தில் ஏற்பட்ட மாற்றத்தைக் காட்டுகிறது.

அந்த நாட்டின் இனவெறிப் பின்னணியை புரிந்து கொண்டால் தான், ரிசர்வேசன் எனும் கோட்டா முறையின் அவசியத்தை உணர முடியும். வெள்ளையர்களின் இனவெறி அரசியல் அந்த நாட்டில் 1948 முதல் 1994 வரை கடுமையாக நிலவியது. கல்வி, வேலை, வீடு, சுகாதாரம், மற்றும் விளையாட்டு போன்ற அனைத்து துறைகளிலும் கருப்பினத்தவர்கள் ஒதுக்கப்பட்டனர். திறமை இருந்தாலும் வாய்ப்பு மறுக்கப்பட்டது. பொருளாதாரம் மற்றும் சமூக சூழ்நிலையால் அவர்களது வளர்ச்சி தடையடைந்தது. இந்த நிலைமை 1994ஆம் ஆண்டு நெல்சன் மண்டேலா தலைமையில் மக்கள் எழுச்சி ஏற்பட்டு ஜனநாயகத் தேர்தல் நடைபெற்று புதிய சமூக அமைப்பு உருவானதற்குப் பிறகும், அதற்குமுன் நிலவிய பின்விளைவுகள் தொடர்ந்திருந்தன.

இதனைக் கவனித்த தென் ஆப்பிரிக்கா அரசு மற்றும் கிரிக்கெட் வாரியம், அனைத்து சமூகங்களுக்கும் சம வாய்ப்பை வழங்கும் நோக்கில் ரிசர்வேசன் முறையை கொண்டு வந்தது. இதில் ஒவ்வொரு கிரிக்கெட் அணியிலும் குறைந்தது ஆறு பேர் பீப்பிள் ஒப் கலர் (People of Colour) என வகைப்படுத்தப்பட்டவர்களாக இருக்க வேண்டும். இதில் குறைந்தது இரண்டு பேர் கருப்பினத்தை சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். இது திறமையின் மீது விளையாடாத நடைமுறை. இது சமூக நீதியின் கோட்பாட்டை முன்னிறுத்தும் செயல்.




பல்லாண்டுகளாக வெள்ளையர்கள் ஆதிக்கம் செலுத்திய துறையில், புறக்கணிக்கப்பட்ட இனத்தவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதன் மூலம் அவர்களின் திறமையை வெளிக்கொணர்வதே இந்த நடைமுறையின் நோக்கம். இப்படி வாய்ப்பு வழங்கப்பட்டதால்தான் தெம்பா பவுமா போன்றோர் உருவாக முடிந்தது. அவரின் வரலாறு வெகு சாதாரணமல்ல. ஆரம்பத்தில் பல்வேறு தடைகளை சந்தித்தவர். வாய்ப்புகள்



வராமல் தவித்தவர். ஆனால் ரிசர்வேசன் முறை மூலம் வாய்ப்பு பெற்ற பிறகு, அதனை திறமையால் வெற்றி திருப்பினார். இன்று அவர் உலக கோப்பையை வென்ற தலைவராக திகழ்கிறார்.

பலர் இந்த கோட்டா முறையை திறமையின் எதிரியாகவே பார்க்கிறார்கள். அரசியல் காரணங்களுக்காக குழுவில் சேர்க்கப்படுகிறார்கள் இது அணியின் தரத்தை பாதிக்கிறது. என விமர்சிக்கின்றனர். ஆனால் இன்று தென்பா பவுமா போன்றவர் வெற்றியின் உயரத்தில் இருக்கிறார்கள் என்றால், அந்த கூற்று தவறானது என்பதற்கே இது பெரும் சான்றாகும். வாய்ப்பு இல்லாமல் வெளிவரும் திறமை சுருங்கிவிடும். வாய்ப்பு கிடைக்கும்போது திறமை வேரூன்றி வளர்கிறது.

இந்த நிகழ்வு நமக்குத் தரும் பாடம் மிக முக்கியமானது. சமூகத்தில் வரலாறாக நீண்டகாலம் ஒடுக்கப்பட்ட குழுக்களுக்கு சம வாய்ப்புகள் கிடைக்க, ஒரு கட்டுப்பாடுகளுடனான வாய்ப்பு ஒதுக்கீடு தேவைப்படும். இது சிலருக்கு ”அநியாயம்” போல் தோன்றலாம். ஆனால் வரலாற்றை முழுமையாக புரிந்து கொண்டால் தான் அது நியாயமாக தெரியும். ஒரு சமூகத்தில் சக சக்திகள் அனைவரும் சம பங்குள்ளவர்களாக உள்ளனர் என்ற உணர்வை ஏற்படுத்தும் செயல்தான் ரிசர்வேசன்.

தெம்பா பவுமாவின் சாதனையை வெறும் ஒரு விளையாட்டு வெற்றியாக பார்க்க முடியாது. இது ஒரு சமூகத்தின் உரிமை




மீட்ட உணர்வாக பார்க்க வேண்டும். காலம் கடந்த பின் ஒடுக்கப்பட்டவர்களின் எதிர்காலம் எப்படி உயரலாம் என்பதை காட்டும் வழிகாட்டியாக இது திகழ்கிறது. விளையாட்டு என்பது வெறும் விளையாட்டாக இல்லை. அது சமூகத்தில் உள்ள ஒழுக்கங்கள், சமநிலை, உரிமைகள் போன்றவற்றை பிரதிபலிக்கும் மேடை.

இந்த வெற்றிக்கேற்ப தெம்பா பவுமா ஒரு பேட்டியில் கூறியுள்ளார், என் பாட்டி




எனக்கு இந்த பெயரை வைத்தார். Temba என்றால் நம்பிக்கை என்று பொருள் என்றார். ஆப்பிரிக்க மொழியில் வுநஅடிய என்றால் நம்பிக்கையும் வலிமையும். தமிழிலும் இதேபோல் தெம்பா இரு என்று சொல்லுவது நம்மிடம் வழக்கமாக உள்ளது. இதுவே மொழிகளைத் தாண்டிய மனித நேயத்தின் சான்று.

இது போன்ற நிகழ்வுகள் நம்மையும் சிந்திக்க வைக்க வேண்டும். நம் நாட்டிலும் பல்வேறு சமூகங்களின் உரிமைகள், வாய்ப்புகள் குறித்து பேச்சுகள், முடிவுகள் நடைபெறுகின்றன. எல்லா சமூகத்தவரும் சமமாக பங்கேற்கும் ஒரு கட்டமைப்பு மட்டுமே உண்மையான வெற்றியின் அடையாளமாக அமையும். இன்று தென் ஆப்பிரிக்காவில் நிகழ்ந்ததை வைத்து, நாம் நம்மை சிந்திக்க வைக்க வேண்டும். வெற்றி என்பது அனைவருக்கும் சமமான முறையில் வாய்ப்பு கிடைக்கும் போது மட்டுமே அதன் மகத்துவம் உணரப்படுகிறது.

தெம்பா பவுமாவின் தலைமையில் தென்னாபிரிக்காவிற்கு கிடைத்த இந்த, வரலாற்று முக்கியத்துவம் மிக்க வெற்றி வலுவாக சொல்லும் செய்தி இதுதான். உங்களுக்கும் வெற்றிகள், சாதனைகள் வேண்டுமென்றால் ஒன்றுபட்ட தேசமாக விளையாடுங்கள். இலங்கைக்கும் சிறுபான்மை இனத்தின் ஒரு தெம்பா பவுமா போன்ற தலைவன் தான் வெற்றிகளை பெற்றுத் தர முடியும் என்றால் அதற்கு அவனை அனுமதியுங்கள்.

